மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை
அசல் வழக்கு எண். 236/2019

**2025–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 08–ம் நாள் திங்கள் கிழமை** வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW–1 வது நபரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சாமிராஜ் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | :மாரிமுத்து | வட்டம் | :வேப்பந்தட்டை |
| கிராமம் | :வி.களத்தூர் | வயது | : 70 /2025 |

**முதல் விசாரணை :**

(i) நான் இவ்வழக்கில் 1ம் பிரதிவாதியாவேன். நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை எழுத்து மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்யும் ஆவணங்களை வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். தாவா சொத்திற்கான அடங்கல் பதிவேட்டின் அசலை (எண்ணிக்கை 4) தாக்கல் செய்கிறேன். (அது **பி.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) தாவா சொத்திற்கான பழைய சிட்டாவின் அசலை தாக்கல் செய்கிறேன். (அது **பி.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) அசல் வழக்கு எண்.39/2019ல் தாக்கல் செய்யப்பட்ட சிட்டா அசலைஎண்ணிக்கை 3) தாக்கல் செய்கிறேன். (அது **பி.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) தாவா சொத்திற்கான கணினி அ–பதிவேடு கணிணியிலிருந்து தரவிறக்கம் செய்யப்பட்ட சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **பி.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) தாவா சொத்திற்கான புல வரைபடம்(FMB) கணிணியிலிருந்து தரவிறக்கம் செய்யப்பட்ட சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **பி.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக வாய்தா அளித்து ஒத்திவைக்கப்படுகிறது.